**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2022-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23ம் நாள் வியாழக்கிழமை**

**இடைநிலை மனு எண்.2/2021**
**இன்**
**இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.88/2017**

அழகுதுரை . . . மனுதார்/மனுதார்

/எதிர்/

1. அய்யாச்சாமி
2. லட்சுமணப்பெருமாள்
3. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், சென்னை, அதன் கிளை மேலாளர் மூலம்
4. சு. சிவராமன்
5. ஜெ. பாலாமணி
6. நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடட், திருப்பூர், அதன் கிளை மேலாளர் மூலம்

. . . 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/
1 முதல் 3 எதிர்மனுதார்கள
. . . உத்தேச 4 முதல் 6
எதிர்மனுதார்கள்

இம்மனுவானது கடந்த 20.06.2022ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. காளிராஜ் அவர்களும், 3ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆழ்வார்சாமி அவர்களும் முன்னிலையாகியும், 1,2 மற்றும் 4 முதல் 6

எதிர்மனுதார்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், வழக்குக் கோப்புக்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>உ த் த ர வு</u>

4 முதல் 6 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் புதிய கட்சியாக முறையே 4 முதல் 6 எதிர்மனுதார்களாக கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரால் இம்மனு உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

பிரதான அசல் மனுவானது 02.12.2016 தேதிய விபத்திற்காக இழப்பீடு கோரி மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதான மனுவில் 3ம் எதிர்மனுதார் தனது எதிருரையில், குற்ற எண்.158/2016ன் விபத்துக்குட்பட்ட லாரி ஓட்டுநர் சிவராமனையும், அதன் உரிமையாளர் பாலாமணியையும், அதன் காப்பீட்டு கழகத்தையும் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார் என்றும், ஷையார்களை பிரதான அசல் மனுவில் தரப்பினர்களாக சேர்ப்பதால் எதிர்மனுதார்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும், எனவே, 4 முதல் 6 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் புதிய கட்சியாக முறையே 4 முதல் 6 எதிர்மனுதார்களாக கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடவேண்டும் என்றும், இல்லையெனில் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இம்மனுவின்பேரில் எவ்வித ஆட்சேபனையும் இல்லையென்றும், எதிருரை இல்லை என்றும் 3ம் எதிர்மனுதார் தரப்பில் மனுவில் மேலெழுத்து செய்யப்பட்டது. ஏனைய எதிர்மனுதார்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. <u>தீர்வு</u>:

பிரதான அசல் மனுவானது 02.12.2016 தேதிய விபத்திற்காக இழப்பீடு கோரி மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதான மனுவில் 3ம் எதிர்மனுதார் தனது எதிருரையில், குற்ற எண்.158/2016ன் விபத்துக்குட்பட்ட லாரி ஓட்டுநர் சிவராமனையும், அதன் உரிமையாளர் பாலாமணியையும், அதன் காப்பீட்டு கழகத்தையும் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார் என்றும், ஷையார்களை பிரதான அசல் மனுவில் தரப்பினர்களாக சேர்ப்பதால் எதிர்மனுதார்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும், எனவே, 4 முதல் 6 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் புதிய கட்சியாக முறையே 4 முதல் 6 எதிர்மனுதார்களாக கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடவேண்டும் என்றும், இல்லையெனில் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில், பிரதான அசல் மனுவானது விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதார் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

8. மனுதாரர் தனது மனுவில், விபத்து ஏற்படுத்திய மற்றொரு வாகனத்தினை தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக 3ம் எதிர்மனுதார் எதிருரை தாக்கல் செய்துள்ளதால், 4 முதல் 6 எதிர்மனுதார்களை கட்சி சேர்க்க அனுமதியளிக்கக் கோரியுள்ளார். மேலும், வழக்கு கோப்பினை ஆராய்கையில், அசல் மனுவில் விபத்து சமயம் மனுதாரர் பயணம் செய்த வாகன உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனத்தினை மனுதார் ஏற்கனவே தரப்பினர்களாக சேர்த்துள்ளார். மேலும், மனுதாரர் தனது மனுவில், 4 முதல் 6 எதிர்மனுதார்கள் தன்னுடைய கட்சிப்படி அவசிய தரப்பினர் என்று யாதொன்றும் குறிப்பிடவில்லை. அவ்வாறுள்ள நிலையில், மனுதாரர் குறிப்பிடுவதுபோல் விபத்தில் ஈடுபட்ட மற்றொரு வாகனத்தையும் தரப்பினராக சேர்ப்பது அவசியமா? என ஆராய்கையில், இந்நீதிமன்றம், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற ***K. Kannaki & Others /Vs/ A. Jalaludeen and Others dated 08.05.2021 reported in 2021 (1) TN MAC 794*** என்ற முன்தீர்ப்பினை சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், மேற்கண்ட முன்தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> 9. The Hon'ble Supreme Court in Khenyei Vs. New India Assurance Company Ltd, Others reported in 2015 (1) TNMAC 801 (SC), while deciding whether it is open to the claimants to recover the entire compensation, from one of the joint tort-feasers in the accident occurred due to the composite negligence of both the vehicles, has considered various decisions, and has laid down the following principles of law:-
>
> “(i) In the case of Composite Negligence, Plaintiff/Claimant is entitled to sue both or any one of the Joint Tort-feasors and to recover the entire Compensation as liability of Joint Tort-feasors is joint and several.
>
> (ii) In the case of Composite Negligence, apportionment of Compensation between two Tort-feasros vis-a-vis the Plaintiff/Claimant is not permissible.

He can recover at his option whole damages from any of them.

(iii) In case all the Joint Tort-feasors have been impleaded and evidence is sufficient, it is open to the Court/Tribunal to determine inter se extent of Composite Negligence of the drivers. However, determination of the extent of negligence between the Joint Tort-feasors is only for the purpose of their inter se liability so that one may recover the sum from the other after making whole of payment to the Plaintiff/Claimant to the extent it has satisfied the liability of the other. In case both of them have been impleaded and the apportionment/extent of their negligence has been determined by the Court/Tribunal, in main case one Joint Tort-feasor can recover the amount from the other in the Execution proceedings.

(iv) It would not be appropriate for the Court/Tribunal to determine the extent of Composite Negligence of the drivers of two vehicles in the absence of impleadment of other Joint Tort-feasors. In such a case, impleaded Joint Tort-feasor should be left, in case he so desires, to sue the other Joint Tort-feasor in independent proceedings after passing of the Decree or Award."

10. Considering the above, it is very much clear that in case of joint tort-feasers, where liability is joint and several, it is the choice of the claimants to claim compensation from the owner and driver and insurer of both the vehicles or any one of them. Subsequently, another full Bench of Hon'ble Apex Court in Kamlesh and others Vs. Attar Singh and others reported in 2015 (2) TN MAC 577 (SC), by referring the above Khenyei's case has held that in case of composite negligence, the claimant is entitled to sue both or any one of Joint Tort feasors and to recover entire compensation as liability of joint tort feasors is joint and several.

11. The Division Bench of our High Court in United India Insurance Company Limited Vs. D.Hemavathi and others reported in 2017 2 TNMAC 150, has followed the judgment of the Khenyei's case. Subsequently, another Division Bench of this Court in Tata AIG General Insurance Company Limited Vs. Kaveri and others reported in CDJ 2020 MHC 4438 in CMA.No.3809 of 2019, dated 08.09.2020 has observed that though the claimants have impleaded the owner of the lorry and its insurer, they have not impleaded the owner of the car and its insurer as parties to the claim petition and it will not disentitle the claimants from getting the compensation amount from the appellant/Insurance Company and that at the same time, the Appellant Insurance Company can recover the compensation amount paid to the claimants, proportionate to the negligence attributable on the part of the driver of the car, from the owner or it's insurer by initiating separate legal proceedings and by relying the judgment of Hon'ble Supreme Court in Khenyei's case, has confirmed the award of the Tribunal.

> 12. It is pertinent to mention that the judgment of the Hon'ble Supreme Court in Khenyei's case was not brought to the notice of the Division Bench, while deciding the appeal in the CMA.No.2309 of 2018. No doubt, if all the parties, the owner and insurer of both the vehicles involved in the accident are parties to the claim petition, then it will be convenient for all and also for the Tribunal to decide the liability. But, the claimant, being the dominus litis cannot be compelled to add other parties, who are not impleaded earlier and it is for the claimants to decide and in case, if the case putforth by the claimants as against the impleaded parties is not true, then they have to suffer the dismissal of the petition.

எனவே, மேற்கண்ட முன்தீர்ப்பின்படி விபத்தில் ஈடுபட்ட அனைத்து வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனங்களை தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், மனுதார் இழப்பீடு கோர விரும்பும் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு கழகத்தை மாத்திரம் தரப்பினர்களாக சேர்த்தால் போதுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கிலும் மனுதாரர் கட்சி சேர்க்க விரும்பும் 4 முதல் 6 எதிர்மனுதார்களை எதற்காக தரப்பினர்களாக கட்சி சேர்க்கவேண்டுமென்றோ அல்லது அவர்களிடமிருந்தும் இழப்பீடு பெறவேண்டும் என்றோ மனுதார் தரப்பில் யாதொரு காரணமும் குறிப்பிடவில்லை. எனவே, மேற்கண்ட முன்தீர்ப்பின்படி மனுதார் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. இறுதியாக, மனுதாரின் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2022ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.06.23 18:24:36 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

| | |
|---|---|
| <u>மனுதார் தரப்பு சாட்சிகள்</u>: | இல்லை |
| <u>மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>: | இல்லை |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u>: | இல்லை |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>: | இல்லை |

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.06.23 18:24:43 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.2/2021**
**இன்**
**இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை**
**அசல் மனு எண்.88/2017**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: 23.06.2022**